செ.வெ.எண்.55 நாள்.22.03.2017.

திருநெல்வேலி மாவட்டம் சமூகநலம் மற்றும் சத்துணைவு திட்டத் துறையின் மூலம் வரதட்சணை தடுப்பு விழிப்புணர்வு தின விழாவில் வெற்றி பெற்ற மாணவியர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் பரிசுகளை வழங்கினார்கள்.

--------

திருநெல்வேலி மாவட்டத்தில், சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறையின் மூலம் வரதட்சணை தடுப்பு விழிப்புணர்வு விழா பாளையங்கோட்டை அரியகுளம் சாரதா மகளிர் கல்லூரியில் இன்று (23.03.2017) நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவியர்களுக்கு பரிசுகளை வழங்கி பேசியதாவது-

கல்வியில் ஏற்பட்ட மாற்றங்களால் பெண்களின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்துள்ளது. பெண்கள் பல்வேறு துறைகளில் சாதனை புரிந்து வருகின்றனர். பெண்கள் சுதந்திரமாக வாழ பல்வேறு உரிமைகள் இன்று சட்டமாக்கப்பட்டுள்ளது. குடும்பங்களில் பல்வேறு பிரச்சனைகள் ஏற்பட ஆண்கள் மட்டுமின்றி பெண்களும் காரணமாக உள்ளனர். குடும்பங்களில் சகிப்புத்தன்மை குறைவாக உள்ளது. தாய், தனது மகளுக்கு திருமணம் செய்யும் போது, வரதட்சணை வழங்குவதை தவிர்ப்பதைப் போலவும், மகனுக்கு திருமணம் செய்யும் போது, வரதட்சணையை எதிர்பார்க்கும் நிலையிலும் உள்ளதை காண முடிகிறது. சிறப்பான கல்லூரியில் பயின்று வரும் நீங்கள் கல்வியை உங்களுக்கு கிடைத்த ஒரு ஆயுதமாக பயன்படுத்தி சமுதாயத்தில் பெண்களுக்கு ஏற்படும் வரதட்சணை தடுப்பு விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும் எனவும், வாழ்க்கையில் சிறப்பான நிலைகளை பெற்று வளம்பெற வேண்டி வாழ்த்துகிறேன் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்கள்.

வரதட்சணை தடுப்பு விழிப்புணர்வு குறித்து நடைபெற்ற பாட்டுப்போட்டி, கோலப்போட்டி, ஓவியப்போட்டி ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவியர்களுக்கு, பதக்கம் மற்றும் சான்றிதழ்களையும், பட்டிமன்றத்தில் பங்கு பெற்ற மாணவியர்களுக்கு நினைவு பரிசினையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், சமுகநல அலுவலர் திருமதி.சு.முத்துலெட்சுமி, சாரதா கல்லூரி செயலாளர், யதீஸ்வரி சரவணபவ பிரியா அம்பா, கல்லூரி முதல்வர் திருமதி.மலர்விழி உள்பட கல்லூரி மாணவியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.